Pursuant to Regulation 59C(9) and 59C(10) of the SEBI ICDR Regulations, the UDRHP-I filed with Securities and Exchange Board of India (**"SEBI"**) shall be made available to the public for comments, if any, for a period of at least 21 days, from the date of publication of this public announcement by hosting it on the website of SEBI at www.sebi.gov.in, on the websites of the Stock Exchanges i.e., BSE at www.bseindia.com, NSE at www.nseindia.com where the Equity Shares are proposed to be listed, the websites of the BRLM, i.e. Elara Capital (India) Private Limited at www.elaracapital.com and the website of our Company at www.jayjagdamba.com. Our Company hereby invites the public to give their comments on the UDRHP-I filed with SEBI, with respect to disclosures made in the UDRHP-I. The members of public are requested to send a copy of their comments to SEBI, to the Company Secretary and Compliance Officer of our Company and/or the BRLM at their respective addresses mentioned herein below. All comments must be received by SEBI and/or our Company and/or the BRLM and/or the Company Secretary and Compliance Officer of our Company at their respective addresses mentioned herein below in relation to the Offer on or before 5:00 p.m. on the 21st day from the aforesaid date of publication of this public announcement in accordance with Regulation 59C(9) and 59C(10) of SEBI ICDR Regulations.

Investments in equity and equity-related securities involve a degree of risk and investors should not invest any funds in the Offer unless they can afford to take the risk of losing their entire investment. Investors are advised to read the risk factors carefully before taking an investment decision in the Offer. For taking an investment decision, investors must rely on their own examination of our Company and the Offer, including the risks involved. The Equity Shares have not been recommended or approved by SEBI, nor does SEBI guarantee the accuracy or adequacy of the contents of the UDRHP-I. Specific attention of the investors is invited to ***"Risk Factors"*** on page 19 of the UDRHP-I.

Any decision to invest in the Equity Shares described in the UDRHP-I may only be made after the red herring prospectus (**"Red Herring Prospectus"**) has been filed with the RoC and must be made solely on the basis of such Red Herring Prospectus as there may be material changes in the Red Herring Prospectus from the UDRHP-I.

The Equity Shares, when offered through the Red Herring Prospectus, are proposed to be listed on the main board of the Stock Exchanges.

For details of the main objects of the Company as contained in its Memorandum of Association, see ***"History and Certain Corporate Matters – Main Objects of our Company"*** on page 258 of the UDRHP-I.

The liability of the members of the Company is limited. For details of the share capital, capital structure of the Company and the names of the signatories to the Memorandum of Association and the number of shares subscribed by them see ***"Capital Structure"*** on page 91 of the UDRHP-I.

BOOK RUNNING LEAD MANAGER	REGISTRAR TO THE OFFER
Elara Capital	MUFG MUFG Intime
Elara Capital (India) Private Limited One International Center, Tower 3, 21st Floor, Senapati Bapat Marg, Elphinstone Road (West), Mumbai – 400013, Maharashtra, India; **Telephone:** + 91 22 6164 8599 **Email:** jjl.ipo@elaracapital.com; **Website:** www.elaracapital.com **Investor Grievance ID:** mb.investorgrievances@elaracapital.com; **Contact Person:** Astha Daga **SEBI Registration Number:** INM000011104	**MUFG Intime India Private Limited** ***(Formerly Link Intime India Private Limited)*** C-101, 1st Floor, 247 Park, L.B.S. Marg, Vikhroli (West) Mumbai - 400 083 Maharashtra, India **Tel:** + 91 81081 14949; **E-mail:** jayjagdamba.ipo@in.mpms.mufg.com **Website:** https://in.mpms.mufg.com/ **Investor grievance e-mail:** jayjagdamba.ipo@in.mpms.mufg.com **Contact person:** Shanti Gopalkrishnan; **SEBI Registration No.:** INR000004058

All capitalized terms used herein and not specifically defined shall have the same meaning as ascribed to them in the UDRHP-I.

For **JAY JAGDAMBA LIMITED**
On behalf of the Board of Directors
Sd/-
Subodh Kumar Soni
Company Secretary and Compliance Officer

Place : Raigarh
Date : August 25, 2026

JAY JAGDAMBA LIMITED is proposing, subject to applicable statutory and regulatory requirements, receipt of requisite approvals, market conditions and other considerations, to undertake an initial public offer of its Equity Shares and has filed the UDRHP-I dated August 24, 2026 filed with SEBI and Stock Exchanges. The UDRHP-I and Draft Abridged Prospectus shall be available on the website of SEBI at www.sebi.gov.in, websites of the Stock Exchanges i.e., BSE at www.bseindia.com, NSE at www.nseindia.com, on the website of the BRLM, i.e. Elara Capital (India) Private Limited at www.elaracapital.com and on the website of our Company at www.jayjagdamba.com. Potential investors should note that investment in equity shares involves a high degree of risk and for details relating to such risk, see the section titled ***"Risk Factors"*** on page 19 of the UDRHP-I and the details set out in the RHP, when filed. Potential investors should not rely on the UDRHP-I filed with SEBI for making any investment decision.

This announcement does not constitute an invitation or offer of securities for sale in any jurisdiction, including India. The Equity Shares offered in the Offer have not been and will not be registered under the United States Securities Act of 1933, as amended (**"U.S. Securities Act"**) or any state securities laws in the United States, and unless so registered, may not be offered or sold within the United States, except pursuant to an exemption from, or in a transaction not subject to, the registration requirements of the U.S. Securities Act and applicable state securities laws. Accordingly, the Equity Shares are being offered and sold outside the United States in 'offshore transactions' as defined in and in reliance on Regulation S under the U.S. Securities Act and the applicable laws of the jurisdictions where such offers and sales are made. There will be no public offering of Equity Shares in the United States.

CONCEPT

*தொழில் தொடங்குவதை எளிதாக்க புதிய சீர்திருத்தங்கள் * தொழில் வளர்ச்சிக்கு வேகம்

தொழிலாளர்களுக்கு மழைக்கால நிவாரணத் தொகை ரூ. 7 ஆயிரமாக உயர்வு

எதிர்கால தொழில்களுக்கு தமிழ்நாடு முன்னுரிமை: முதல்வர் விஜய் உறுதி

தொழில்துறை அமைச்சர் கீர்த்தனா சமர்ப்பித்த தொழில் கொள்கை குறிப்பில் முக்கிய அறிவிப்புகள்

சென்னை, ஆக. 26–

செயற்கை நுண்ணறிவு, செமிகண்டக்டர், விண்வெளி மற்றும் பாதுகாப்புத் துறை, மின்சார வாகனங்கள், கப்பல் கட்டுமானம், பசுமை ஹைட்ரஜன், படைப்பாற்றல் பொருளாதாரம் உள்ளிட்ட எதிர்கால தொழில்களில் முதலீடுகளை ஈர்க்கும் வகையில் 2026–27ம் ஆண்டுக்கான தொழில் வளர்ச்சித் திட்டங்கள் செயல்படுத்தப்படும் என்று தொழில்துறை அமைச்சர் எஸ். கீர்த்தனா சட்டசபையில் தாக்கல் செய்த கொள்கைக் குறிப்பில் தெரிவித்துள்ளார்.

தமிழ்நாட்டை அடுத்த தலைமுறை மற்றும் ஆழ்தொழில்நுட்ப (DeepTech) தொழில்களின் முன்னணி மையமாக உருவாக்கும் வகையில் புதிய தொழில் கொள்கை செயல்படுத்தப்பட உள்ளது. தேசிய குவாண்டம் இயக்கம் உள்ளிட்ட தேசிய முன்னுரிமைகளுடன் மாநிலத்தின் தொழில் வளர்ச்சித் திட்டங்கள் ஒருங்கிணைக்கப்படுகின்றன. 2036ம் ஆண்டுக்குள் 1.5 டிரில்லியன் அமெரிக்க டாலர் பொருளாதாரம் என்ற இலக்கை நோக்கி முதலீடு, உயர்தர வேலைவாய்ப்பு, ஏற்றுமதி மற்றும் தொழில்நுட்ப முன்னேற்றம் ஆகியவற்றுக்கு முக்கியத்துவம் அளிக்கப்படும்.

தமிழ்நாட்டின் விண்வெளி மற்றும் பாதுகாப்புத் துறை வளர்ச்சியில் கோவை மாவட்டம் வரப்பட்டியில் அமைக்கப்பட்டு வரும் பாதுகாப்புத் துறை உதிரிபாக உற்பத்திப் பூங்கா முக்கிய இடம் பெறுகிறது. TIDCO மற்றும் SIPCOT இணைந்து உருவாக்கும் இந்தப் பூங்கா 370.59 ஏக்கர் பரப்பளவில் ரூ.225 கோடி மதிப்பீட்டில் உருவாக்கப்படுகிறது.

பாதுகாப்புத் துறையைச் சேர்ந்த 20 நிறுவனங்களுக்கு 59 ஏக்கர் நிலம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதில் ஸ்டார்ட்அப் நிறுவனங்கள் மற்றும் குறு, சிறு, நடுத்தர நிறுவனங்களும் இடம்பெற்றுள்ளன. இதன் மூலம் சுமார் 2,500 பேருக்கு வேலைவாய்ப்பு உருவாகும் என எதிர்பார்க்கப்படுகிறது. 10.87 ஏக்கரில் 2.70 லட்சம் சதுர அடி பரப்பளவு கொண்ட PlugandPlay வசதியும் உருவாக்கப்படுகிறது.

விண்வெளி மற்றும் பாதுகாப்புத் தொழில் பூங்கா

கோவை மாவட்டம் சூலூரில் விண்வெளி மற்றும் பாதுகாப்புத் தொழில் பூங்கா அமைப்பதற்காக 200 ஏக்கர் நிலம் கையகப்படுத்தும் பணி நடைபெற்று வருகிறது. ஜெர்மனியின் முனிச் அருகே உள்ள Oberpfaffenhoffen தொழில் பூங்காவை முன்மாதிரியாகக் கொண்டு உருவாக்கப்படும் இந்தப் பூங்காவில் விமான பராமரிப்பு, பழுதுபார்ப்பு மற்றும் மறுசீரமைப்பு (MRO), விமான இறுதி ஒருங்கிணைப்பு உள்ளிட்ட பணிகளை மேற்கொள்ளும் நிறுவனங்களுக்கு ஒடுதள வசதி வழங்கப்படும்.

விண்வெளித் துறைக்கு புதிய உத்வேகம்

விண்வெளித் தொழில்நுட்பத் துறையை வளர்ப்பதற்காக குலசேகரப்பட்டினம் விண்வெளி ஏவுதளத்தைச் சுற்றி தனி Space Investment Region உருவாக்கப்பட்டு வருகிறது. செயற்கைக்கோள் உற்பத்தி, தரை அமைப்புகள் மற்றும் விண்வெளி உதிரிபாகங்கள் தயாரிக்கும் நிறுவனங்களை ஈர்ப்பதே இதன் நோக்கமாகும்.

குலசேகரப்பட்டினம் அருகே சுமார் 870 ஏக்கரில் Space Propellant Park உருவாக்கப்படுகிறது. Solar Explosives மற்றும் Premier Explosives நிறுவனங்களுடன் ஏற்கனவே புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் செய்யப்பட்டுள்ளன.

தூத்துக்குடி அருகே அல்லிக் குளத்தில் Space Manufacturing Park உருவாக்கப்படுகிறது. ராக்கெட் மற்றும் செயற்கைக்கோள் தயாரிப்பு நிறுவனங்கள் விண்வெளி ஏவுதளத்திற்கு அருகிலேயே தங்கள் தொழிற்சாலைகளை அமைக்க இந்தப் பூங்கா உதவும். Agnikul Cosmos மற்றும் Skyroot Aerospace நிறுவனங்கள் இங்கு தங்களது வசதிகளை அமைக்க அரசுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்துள்ளன.

ராக்கெட் உதிரிபாகங்கள் மற்றும் செயற்கைக்கோள்களின் ஒருங்கிணைப்பு, சோதனை உள்ளிட்ட பணிகளுக்கான Space Vehicle Common Technical Facility Centre அமைக்கப்படுகிறது. இதற்காக INSPACe ரூ.100 கோடி நிதியும் தொழில்நுட்ப உதவியும் வழங்குகிறது. Agnikul Cosmos நிறுவனத்தில் TIDCO ரூ.25 கோடி முதலீடு செய்யவும் முன்மொழிந்துள்ளது.

தொழில் தொடங்குவதை எளிதாக்க புதிய சீர்திருத்தங்கள்

முதலீடுகளை விரைவுபடுத்தும் வகையில் தொழில் செய்வதை எளிதாக்குதல் மற்றும் Business Reform Action Plan (BRAP) 2026 ஆகியவற்றுக்கு கொள்கைக் குறிப்பில் முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது.

BRAP 2024ன் கீழ் 25க்கும் மேற்பட்ட துறைகளுடன் இணைந்து 434 சீர்திருத்தங்களை தமிழ்நாடு செயல்படுத்தியது. தொழில் தொடக்கம், கட்டுமான அனுமதி, தொழிலாளர் விதிமுறைகள் மற்றும் நில நிர்வாகம் ஆகிய நான்கு முக்கிய பிரிவுகளில் DPIITயால் தமிழ்நாடு Top Achiever ஆக அங்கீகரிக்கப்பட்டது.

BRAP 2026ன் கீழ் 33 துறைகளுடன் இணைந்து 74 சீர்திருத்தங்கள் செயல்படுத்தப்பட உள்ளன. முதலீட்டு வசதிகள், தொழிலாளர் சீர்திருத்தங்கள், கட்டுமான அனுமதிகள், சுற்றுச்சூழல் விதிமுறைகள், தகராறு தீர்வு, பயன்பாட்டு சேவைகள், குற்றமயமற்றதாக்குதல் மற்றும் Central Inspection System உள்ளிட்ட ஒன்பது பிரிவுகளில் இந்த சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்படுகின்றன. இவை செப்டம்பர் 2026க்குள் செயல்படுத்த இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

சிங்கிள் விண்டோ 3.0

அனைத்து அரசுதொழில் நிறுவன விண்ணப்பங்களுக்கும் ஒரே நுழைவாயிலாக மாற்றப்பட உள்ளது. ஒரே ஒருங்கிணைந்த கேள்வி, குறைந்த ஆபத்துள்ள அனுமதிகளுக்கு காலக்கெடு முடிந்ததும் தானியங்கி ஒப்புதல், அதிக ஆபத்துள்ள விண்ணப்பங்களை தானாக மறுஆய்வு குழுவுக்கு அனுப்புதல், ஒருமுறை மட்டுமே ஆவணங்களை சமர்ப்பிக்கும் "OnlyOnce" நடைமுறை உள்ளிட்ட சீர்திருத்தங்கள் முன்மொழியப்பட்டுள்ளன.

விண்ணப்பதாரர் பதிலளிக்கும் காலத்தில் கடிகாரம் நிறுத்தப்பட்டு, பின்னர் மீதமுள்ள காலத்திலிருந்து அனுமதி நடைமுறை தொடரும். விண்ணப்பங்களின் நிலையை நிகழ்நேரத்தில் கண்காணிக்க துறைவாரியான, சேவைவாரியான மற்றும் முதலீட்டாளர்வாரியான டாஷ்போர்டுகளும் உருவாக்கப்பட உள்ளன.

தொழில் வளர்ச்சிக்கு வேகம்

போக்குவரத்து, நகர்வு மற்றும் தளவாடத் துறை வளர்ச்சிக்கும் கொள்கைக் குறிப்பில் முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது. TIDCO, இந்திய விமான நிலைய ஆணையத்துடன் இணைந்து புதிய விமான நிலையங்களை உருவாக்குதல், ஏற்கனவே உள்ள விமான நிலையங்களை விரிவுபடுத்துதல் மற்றும் நவீனப்படுத்தும் பணிகளை மேற்கொண்டு வருகிறது.

கிருஷ்ணகிரி மாவட்டம் ஓசூரில் விமான நிலையம் அமைக்கப்படும். ஓசூர்கிருஷ்ணகிரி பகுதியில் அதிகரித்து வரும் பயணிகள் மற்றும் சரக்கு போக்குவரத்து தேவையைப் பூர்த்தி செய்வதுடன், வேகமாக வளர்ந்து வரும் தொழில் சூழலுக்கு ஆதரவாகவும், ஓசூரை தென்னிந்தியாவின் முக்கிய விமானப் போக்குவரத்து மற்றும் பொருளாதார மையமாக உருவாக்கவும் இந்தத் திட்டம் உதவும்.

ராமநாதபுரத்தில் பசுமை விமான நிலையம்

ராமநாதபுரம் மாவட்டத்தில் பசுமைவெளி விமான நிலையம் அமைக்கவும் அரசு முன்மொழிந்துள்ளது. ராமேஸ்வரம் மற்றும் சுற்றுப்புற சுற்றுலாத் தலங்களுக்கான போக்குவரத்து இணைப்பை மேம்படுத்துவதோடு, பிராந்தியத்தின் பொருளாதார வளர்ச்சிக்கும் இந்த விமான நிலையம் உதவும்.

இதற்காக ராமநாதபுரம் மாவட்டத்தில் இரண்டு இடங்கள் அடையாளம் காணப்பட்டு, இந்திய விமான நிலைய ஆணைய அதிகாரிகள் அவற்றை ஆய்வு செய்துள்ளனர். அவர்களின் பரிந்துரையின் அடிப்படையில் இறுதி இடம் தேர்வு செய்யப்பட்டு, விமான நிலையம் அமைக்கும் பணிகள் தொடங்கப்படும்.

2026–27ம் ஆண்டில் புதிய தொழில் பூங்காக்கள், விரைவான அனுமதிகள், டிஜிட்டல் முதலீட்டு வசதிகள் மற்றும் துறைசார் உள்கட்டமைப்புகள் மூலம் தொழில் வளர்ச்சியை மாநிலம் மேலும் விரிவுபடுத்தும். இதன் மூலம் தமிழ்நாட்டை உலகளவில் போட்டியிடக்கூடியதும், அனைத்து பகுதிகளையும் உள்ளடக்கியதுமான தொழில் மையமாக உருவாக்குவதே அரசின் நோக்கமாகும்.

வெற்றி மகளிர் தொழில் முனைவோர் மேம்பாட்டுத் திட்டம்

சட்டசபையில் நேற்று மானியக்கோரிக்கையில் தொழிற்துறை சார்பில் மொத்தம் 22 அறிவிப்புகளை அமைச்சர் கீர்த்தனா வெளியிட்டார். அதில் முக்கிய அறிவிப்புகள் வருமாறு:–

நடப்பு நிதியாண்டில் தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் "வெற்றி மகளிர் தொழில்முனைவோர் மேம்பாட்டுத் திட்டம்" மூலம் மகளிர் தொழில்முனைவோருக்கு தொழில்முனைவோர் மேம்பாட்டு பயிற்சி வழங்கி, தொழில்முனைவோரின் பங்களிப்பு 35 சதவீதத்தில் இருந்து 20 சதவீதமாகவும், பிணைய சொத்து 50 சதவீதத்தில் இருந்து 40 சதவீதமாகவும் மற்றும் வட்டி விகிதம் ஆண்டுக்கு 10.20 சதவீதத்தில் இருந்து 9.95 சதவீதமாகவும் தளர்வு செய்யப்பட்டு, எளிய முறை யில் மகளிர் தொழில்முனைவோர்களுக்கு கடன்உதவி வழங்கப்படும்.

நடப்பாண்டில், "வெற்றி மகளிர் தொழில்முனைவோர் மேம்பாட்டுத் திட்டத்தின்" மூலம் தமிழ்நாடு தொழில் முதலீட்டு கழகத்தால் ரூ.500 கோடி மதிப்பிலான கடன்உதவி வழங்கப்படும். இதன் மூலம் 500– க்கும் மேற்பட்ட மகளிர் தொழில் முனைவோர்களால் நிர்வகிக்கப்படும் குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் பயன்பெறுவதோடு, 3,500– க்கும் மேற்பட்ட புதிய வேலைவாய்ப்புகள் உருவாக்கப்படும்.

* உப்பளத் தொழிலாளர்களின் குடும்பத்திற்கு ஆண்டொன்றுக்கு தற்போது வழங்கப்பட்டு வரும் மழைக்கால நிவாரணத் தொகை ரூ.5 ஆயிரத்தில் இருந்து ரூ.7 ஆயிரமாக உயர்த்தி வழங்கப்படும். இத்திட்டத்தின் மூலம் சுமார் 23,000 தொழிலாளர் குடும்பங்கள் பயனடையும். இதன் மூலம் ஏற்படும் ரூ.16.78 கோடி செலவை அரசே ஏற்கும்.

* தமிழ்நாடு உப்பு நிறுவனத்தால் தயாரிக்கப்பட்டு வரும் இருவித செறிவூட்டப்பட்ட உப்பு 'வெற்றி இருவித செறிவூட்டப் பட்ட உப்பு' என்ற வணிக பெயரில் நியாய விலைக்கடைகளிலும் (ரேஷன் கடைகள்) மற்றும் வெளிச்சந்தைகளிலும் விற்பனை செய்யப்படும்.

ஓசூர், ராமநாதபுரத்தில் விமான நிலையம்

கிருஷ்ணகிரி மாவட்டம் ஓசூரில் பயணிகள் மற்றும் சரக்கு போக்குவரத்து அதிகரித்து வருவதைக் கருத்தில் கொண்டு விமான நிலையம் அமைக்கப்படும். வேகமாக வளர்ந்து வரும் ஓசூர்கிருஷ்ணகிரி தொழில் மண்டலத்திற்கு இது கூடுதல் போக்குவரத்து வசதியை வழங்கும்.

ராமேஸ்வரம் உள்ளிட்ட சுற்றுலாத் தலங்களுக்கு போக்குவரத்து வசதியை மேம்படுத்தவும், ராமநாதபுரம் மாவட்டத்தின் பொருளாதார வளர்ச்சியை ஊக்குவிக்கவும் பசுமைவெளி விமான நிலையம் அமைக்க அரசு முன்மொழிந்துள்ளது. இரண்டு இடங்கள் ஆய்வு செய்யப்பட்டுள்ள நிலையில், AAI பரிந்துரையின் அடிப்படையில் இறுதி இடம் தேர்வு செய்யப்படும்.

சிவகாசி பட்டாசு ஆலை பாதுகாப்பு

* சிவகாசி, இந்தியாவின் முன்னணி பட்டாசு உற்பத்தி மையமாகத் திகழ்வதுடன், 1,000– க்கும் மேற்பட்ட உரிமம் பெற்ற உற்பத்தி அலகுகளை கொண்டு, ஆண்டுக்கு சுமார் ரூ.7,000 கோடி வருமானம் ஈட்டி, ஏறத்தாழ 5 லட்சம் குடும்பங்க ளின் வாழ்வாதாரத்திற்கு ஆதரவளித்து வருகிறது. பாதுகாப்பு, நிலைத்தன்மை, தொழில்நுட்ப பயன்பாடு மற்றும் திறன் மேம்பாட்டை வலுப்படுத்தும் வகையில், "சிவகாசி பைரோடெக்னிக்ஸ் பொது வசதி மையம்" அமைக்க தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் ஒரு விரிவான திட்ட அறிக்கை ரூ.2 கோடி மதிப்பீட்டில் தயாரிக்கும்.

"ஒருவரை வெளியேற்றி, அதற்கான காரணத்தை விளக்க வேண்டிய சூழ்நிலைக்கு தள்ள வேண்டாம்"

சட்டமன்ற கண்ணியம் காக்க ஒத்துழைப்பு கொடுங்கள்: சபாநாயகர் ஜேசிடி பிரபாகர் உருக்கமான வேண்டுகோள்

சென்னை, ஆக. 26–

சட்டமன்றக் கண்ணியம் காக்க ஒத்துழைப்பு கொடுங்கள் சபாநாயகர் ஜேசிடி பிரபாகர் உருக்கமான வேண்டுகோள் விடுத்தார்.

சட்ட பேரவையில் நேற்று சபாநாயகர் ஜே.சி.டி. பிரபாகர், பேரவை நடவடிக்கைகளின்போது சில எம்.எல்.ஏ.க்களின் நடத்தை குறித்து அதிருப்தி தெரிவித்தார். இது குறித்து சட்டசபையில் அவர் கூறியதாவது:

உறுப்பினர்களுக்கு நான் வருத்தத்துடன் ஒரு கருத்தை வெளியிட விரும்புகிறேன். மிகுந்த ஜனநாயக உணர்வோடும் அன்போடும் சபை கண்ணியத்தை மீறாமல் அனைவருக்கும் வாய்ப்பளித்து இந்த சபையை இப்படித்தான் நடத்த வேண்டும் என்று மக்கள் விரும்புகிறார்களோ, அப்படி இருக்க வேண்டும் என்றுதான் முதலமைச்சர் அளித்த இந்த வாய்ப்பைச் சரியாகப் பயன்படுத்திக் கொண்டிருக்கிறேன்.

பேரவையில் சில உறுப்பினர்கள் தங்களின் இருப்பைக் காட்டிக் கொள்ள வேண்டும் என்பதற்காகத் தேவையற்ற இடையூறுகளை ஏற்படுத்துவதாகச் சுட்டிக்காட்டினார்.

எதிர்க்கட்சி உறுப்பினர்கள் மட்டுமன்றி, ஆளுங்கட்சி தரப்பிலும் சில எம்.எல்.ஏக்களின் செயல்பாடுகள் தவறாகவும் அவையின் மரபுகளுக்கு முரணாகவும் உள்ளது. சட்டப்பேரவையின் கண்ணியத்தையும், ஒழுங்கையும் பாதுகாப்பது ஆளும் கட்சி மற்றும் எதிர்க்கட்சி என இரு தரப்பினரின் பொறுப்பு. பேரவை மரபுகளுக்கு எந்தவிதமான பாதிப்பும் ஏற்படாமல், கண்ணியத்துடன் நடவடிக்கைகளை நடத்துவதும், அதே நேரத்தில் அனைத்து உறுப்பினர்களுக்கும் விவாதங்களில் பங்கேற்க வாய்ப்பளிப்பதுமே எனது நோக்கம்.

யாரையும் வெளியேற்றுவது எனது நோக்கம் அல்ல

கடந்த இரண்டு நாட்களாக, குறிப்பாக இரு தரப்பிலும் பின்வரிசைகளில் அமர்ந்திருக்கும் சில உறுப்பினர்கள் தங்களது இருக்கைகளை விட்டு எழுந்து, கைகளை உயர்த்தியபடி பேரவையின் மையப்பகுதியை நோக்கி வருவதையும், வரம்பு மீறுவதையும் கவனித்து வருகிறேன். பேரவை நடவடிக்கைகளின்போது சில உறுப்பினர்கள் பயன்படுத்தும் தகாத வார்த்தைகள் பேசுவது வேதனை அளிக்கிறது. பேரவை நடவடிக்கைகளை மக்கள் கவனித்து வருகின்றனர் என்பதை உறுப்பினர்கள் உணர வேண்டும். உறுப்பினர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டிய நிலைக்கு என்னை தள்ள வேண்டாம். யாரையும் பேரவையிலிருந்து வெளியேற்றுவது எனது நோக்கம் அல்ல. ஒருவரை வெளியேற்றி, அதற்கான காரணத்தை நான் விளக்க வேண்டிய சூழ்நிலைக்கு என்னை தள்ள வேண்டாம். உறுப்பினர்கள் அனைவரும் சுயக்கட்டுப்பாட்டுடன் நடந்து கொண்டு, அவையின் கண்ணியத்தையும் பெருமையையும் காப்பாற்ற முன்வர வேண்டும்.

இவ்வாறு அவர் கூறினார்.

லாட்டரி தொழிலை சட்டப்பூர்வமாக செய்கிறோம்

எனது கணவரை தேவையில்லாமல் இழுக்க வேண்டாம்: லீமா ரோஸ் கண்டனம்

சென்னை, ஆக. 26–

எனது கணவரை தேவையில்லாமல் இழுக்க வேண்டாம் என லால்குடி எம்.எல்.ஏ. லீமா ரோஸ் கூறியுள்ளார்.

சட்டசபையில் இயற்கை வளங்கள் துறை, தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை, தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் ஆகிய துறைகள் மீதான மானியக்கோரிக்கை மீது விவாதம் நேற்று நடைபெற்றது. அப்போது, தி.மு.க. முன்னாள் அமைச்சர் தங்கம் தென்னரசு அவையில் லாட்டரி குறித்து பேசினார்.

இதற்கு கண்டனம் தெரிவித்து லீமா ரோஸ் எம்.எல்.ஏ. கூறியதாவது:

சட்டசபையில் முன்னாள் அமைச்சர் தங்கம் தென்னரசு உள்ளிட்ட சிலர் லாட்டரி குறித்து பேசி அவர்கள் செய்த தவறை மறைக்கின்றனர். அதற்காக லாட்டரி என தொடர்ந்து பேசி வருகின்றனர்.

என் கணவர் வேறு மாநிலத்தில் தொழில் செய்து வருகிறார். எந்த அரசு வந்தாலும் நாங்கள் வரி செலுத்தி வியாபாரம் செய்து வருகிறோம். அண்ணா ஆட்சியில் லாட்டரி தொழில் கொண்டு வரப்பட்டது. லாட்டரி விற்பனையை கொச்சைப்படுத்துவது போன்று பேசுகிறார். நாங்கள் சட்டரீதியாக உரிமம் பெற்று தொழில் செய்கிறோம். சட்டவிரோத வகையில் லாட்டரி தொழில் எதுவும் செய்யவில்லை. எந்த அமைச்சர் கேள்வி கேட்டாரோ அவருக்கு பதில் அளிக்க வேண்டும். தேவையில்லாமல் எனது கணவரை இழுக்க வேண்டாம்.

இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

BEFORE THE HON'BLE ADDL. DIST MUNSIF COURT AT ALANDUR
O.S.No. 386 / 2019

K. Ashwin .... Plaintiff

-Vs-

B.Sujatha .... 5th Defendant

To
B.Sujatha,
D/o.Late Purushothaman,
7/4, Bishop Lane, Purasawalkam,
Chennai-7

NOTICE

In the suit filed by plaintiff, the Hon'ble Addl. Dist Munsif Court has ordered publication on 13.08.2026 for your appearance.

You are, therefore, called upon to enter your appearance on 01.09.2026 at 10.30 a.m., before the above court. On failure, please note that the above suit will be decided in your absence.

S.P. Sampathkumar
Counsel for Plaintiff
E.No.Ms. 1096/89

IN THE I ADDL FAMILY COURT AT CHENNAI.
H.M.O.P No. 2822 of 2024

Vijayalakshmi ...Petitioner

-Vs-

E.Anandakumar
Infency Sahana ...Respondents

To:-
1.E.Anandakumar (1st Respondent)
S/o.Elumalai
Residing at
No.1 Kalladikuppam Village,
Gingee Taluk,Villupuram
Pin 605651
2. Infency Sahana (2nd Respondent)
C/o.E.Anandakumar
Residing at
No.2/2B, Villupuram Road,
Near Petrol Bunk, Sakkarapuram,
Gingee,
Villupuram District- Pin 604202

Please take notice in the above petition for Divorce which stands posted on 17.09.2026 at 10.30 a.m. before I Additional Family Court, Chennai. You are hereby required to appear either in person or through a pleader to answer the above petition on 17.09.2026 at 10:30 a.m before the above said I Additional Family Court, Chennai. Failing which the same may be decided in your absence.

VIJAYALAKSHMI
PETITIONER

KINGFA

கிங்பா சயின்ஸ் அன்ட் டெக்னாலஜி (இந்தியா) லிமிடெட்

CIN: L25209TN1983PLC010438

பதிவு அலுவலகம் : தன் பில்டிங், 3வது மாடி, 827, அண்ணா சாலை, சென்னை 600 002. **தொலைபேசி :** +91–044–28521736. **பேக்ஸ் :** +91–044–28520420 **மின்னஞ்சல் :** cs@kingfaindia.com **இணையதளம் :** www.kingfaindia.com

42வது வருடாந்திர பொதுக் கூட்ட அறிவிப்பு

கிங்பா சயின்ஸ் & டெக்னாலஜி (இந்தியா) லிமிடெட் ("நிறுவனம்") உறுப்பினர்களின் 42–வது வருடாந்திர பொதுக் கூட்டம் ("AGM"), நிறுவனங்கள் சட்டம் 2013 ("சட்டம்"), அதன் கீழ் உருவாக்கப்பட்ட விதிகள் மற்றும் கார்ப்பரேட் விவகார அமைச்சகம் ("MCA") மற்றும் இந்தியப் பங்கு மற்றும் பரிவர்த்தனை வாரியம் ("SEBI") ஆகியவை அவ்வப்போது வெளியிடும் பொருந்தக்கூடிய சுற்றறிக்கைகளுக்கு இணங்க, AGM அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள வணிகங்களை மேற்கொள்வதற்காக, **செப்டம்பர் 28, 2026, திங்கட்கிழமை அன்று காலை 11:30 மணிக்கு** (இந்திய நேரப்படி – "IST") காணொளி காட்சி ("VC")/பிற ஆடியோ காட்சி வழிமுறைகள் ("OAVM") மூலமாக நடைபெறும் என்று இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

பொருந்தக்கூடிய MCA மற்றும் SEBI சுற்றறிக்கைகளுக்கு இணங்க, 2025–26 நிதியாண்டிற்கான வருடாந்திர அறிக்கையுடன் AGM–ன் அறிவிப்பானது, நிறுவனம்/டெபாசிட்டரிகளில் தங்களது மின்னஞ்சல் முகவரிகளைப் பதிவு செய்துள்ள மற்றும் கட்ஆப் தேதியான ஆகஸ்ட் 28, 2026 வெள்ளிக்கிழமை அன்று பங்குகளை வைத்திருக்கும் உறுப்பினர்களுக்கு மட்டுமே மின்னணு முறையில் (Electronic mode) அனுப்பப்படும். தங்களது மின்னஞ்சல் முகவரியைப் பதிவு செய்யாத உறுப்பினர்கள், AGM அறிவிப்பு மற்றும் வருடாந்திர அறிக்கையை மின்னஞ்சல் மூலம் பெறுவதற்காக, தங்களது சம்பந்தப்பட்ட டெபாசிட்டரி பங்கேற்பாளர்களிடம் (Depository Participants) மின்னஞ்சல் முகவரியைப் பதிவு செய்ய/புதுப்பிக்கக் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

2025–26 நிதியாண்டிற்கான வருடாந்திர அறிக்கையின் அச்சிடப்பட்ட நகலை பெற விரும்பும் எந்தவொரு உறுப்பினரும், தங்களின் ஃபோலியோ எண் (Folio No.) / DP ID மற்றும் வாடிக்கையாளர் ஐடி (Client ID) ஆகியவற்றைக் குறிப்பிட்டு, நிறுவனத்தின் cs@kingfaindia.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கோ அல்லது நிறுவனத்தின் பங்கு வெளியீடு மற்றும் பங்கு பரிமாற்ற முகவர்களான ("RTA"), மெஸர்ஸ். இன்டகிரேட்டட் ரெஜிஸ்ட்ரி மேனேஜ்மென்ட் சர்வீசஸ் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்தின் yuvraj@integratedindia.in என்ற மின்னஞ்சல் முகவரிக்கோ கோரிக்கையை அனுப்பலாம்.

நிறுவனத்தின் வருடாந்திர அறிக்கை மற்றும் AGM அறிவிப்பு ஆகியவை நிறுவனத்தின் இணையதளமான www.kingfaindia.com, NSDL–ன் மின்னணு–வாக்களிப்பு (e–voting) இணையதளமான www.evoting.nsdl.com மற்றும் பங்குச்சந்தைகளான BSE லிமிடெட் மற்றும் நேஷனல் ஸ்டாக் எக்ஸ்சேஞ்ச் ஆஃப் இந்தியா லிமிடெட் ஆகியவற்றின் இணையதளங்களான முறையே www.bseindia.com மற்றும் www.nseindia.com ஆகியவற்றிலும் கிடைக்கும்.

டெபாசிட்டரிகளில் தங்களது மின்னஞ்சல் முகவரிகளைப் பதிவு செய்யாத உறுப்பினர்கள், அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள தீர்மானங்களுக்கு மின்னணு–வாக்களிப்பிற்காக (e–voting) பயனர் ஐடி (user ID) மற்றும் கடவுச்சொல்லைப் (password) பெறுவதற்கும் மற்றும் மின்னஞ்சல் முகவரிகளைப் பதிவு செய்வதற்கும் பின்பற்ற வேண்டிய நடைமுறை கீழே கொடுக்கப்பட்டுள்ளது:

வ. எண்	செயல்முறை
1.	பங்குகள் காகித முறையில் இருந்தால், தயவுசெய்து ஃபோலியோ எண், பங்குதாரரின் பெயர், பங்குச் சான்றிதழின் ஸ்கேன் செய்யப்பட்ட நகல் (முன்புறம் மற்றும் பின்புறம்), PAN (சுய சான்றளிக்கப்பட்ட பான் கார்டின் ஸ்கேன் செய்யப்பட்ட நகல்), மற்றும் ஆதார் (சுய சான்றளிக்கப்பட்ட ஆதார் அட்டையின் ஸ்கேன் செய்யப்பட்ட நகல்) ஆகியவற்றை cs@kingfaindia.com அல்லது yuvraj@integratedindia.in என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பவும்.
2.	பங்குகள் டிமேட் (Demat) முறையில் இருந்தால், தயவுசெய்து DP–ID/CLID (16 இலக்க DP ID + CLID அல்லது 16 இலக்க பயனாளியின் ஐடி), பெயர், கிளைன்ட் மாஸ்டர் அல்லது ஒருங்கிணைந்த கணக்கு அறிக்கையின் நகல், PAN (சுய சான்றளிக்கப்பட்ட பான் கார்டின் ஸ்கேன் செய்யப்பட்ட நகல்), ஆதார் (சுய சான்றளிக்கப்பட்ட ஆதார் அட்டையின் ஸ்கேன் செய்யப்பட்ட நகல்) ஆகியவற்றை cs@kingfaindia.com அல்லது yuvraj@integratedindia.in என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பவும்.
3.	மாற்றாக, பங்குதாரர் மேலே குறிப்பிடப்பட்ட ஆவணங்களை வழங்குவதன் மூலம், மின்னணு வாக்களிப்பிற்கான (e–voting) பயனர் ஐடி (user ID) மற்றும் கடவுச்சொல்லைப் பெறுவதற்கு evoting@nsdl.com என்ற முகவரிக்கு கோரிக்கை அனுப்பலாம்.
4.	பட்டியலிடப்பட்ட நிறுவனங்கள் (Listed Companies) வழங்கும் மின்னணு–வாக்களிப்பு (e–voting) வசதி குறித்த செபியின் (SEBI) சுற்றறிக்கைகளின்படி, டிமேட் முறையில் பங்குகளை வைத்திருக்கும் தனிப்பட்ட பங்குதாரர்கள், டெபாசிட்டரிகள் (Depositories) மற்றும் டெபாசிட்டரி பங்கேற்பாளர்களிடம் (Depository Participants) பராமரிக்கப்படும் தங்களது டிமேட் கணக்கின் மூலம் வாக்களிக்க அனுமதிக்கப்படுகிறார்கள். மின்னணு வாக்களிப்பு வசதியை அணுகுவதற்கு, பங்குதாரர்கள் தங்களது டிமேட் கணக்கில் தங்களின் மொபைல் எண் மற்றும் மின்னஞ்சல் முகவரியைச் சரியாகப் புதுப்பிக்க வேண்டும்.

பங்குகள் அச்சிடப்பட்ட வடிவில் (physical mode) இருக்கும் பட்சத்தில், ஃபோலியோ எண் (Folio No.), பங்குதாரரின் பெயர், பங்குச் சான்றிதழின் ஸ்கேன் செய்யப்பட்ட நகல் (முன்புறம் மற்றும் பின்புறம்), PAN (சுய சான்றளிக்கப்பட்ட பான் கார்டின் ஸ்கேன் செய்யப்பட்ட நகல்) மற்றும் ஆதார் (சுய சான்றளிக்கப்பட்ட ஆதார் அட்டையின் ஸ்கேன் செய்யப்பட்ட நகல்) ஆகியவற்றை cs@kingfaindia.com அல்லது yuvraj@integratedindia.in என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பவும்.

பங்குகளை டீமேட் (demat mode) வடிவில் வைத்திருக்கும் பட்சத்தில், DP–ID/CLID (16 இலக்க DP ID + CLID அல்லது 16 இலக்க பயனாளியின் ஐடி), பெயர், கிளைன்ட் மாஸ்டர் (client master) அல்லது ஒருங்கிணைந்த கணக்கு அறிக்கையின் (Consolidated Account Statement) நகல், PAN (சுய சான்றளிக்கப்பட்ட பான் கார்டின் ஸ்கேன் செய்யப்பட்ட நகல்), ஆதார் (சுய சான்றளிக்கப்பட்ட ஆதார் அட்டையின் ஸ்கேன் செய்யப்பட்ட நகல்) ஆகியவற்றை cs@kingfaindia.com அல்லது yuvraj@integratedindia.in என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பவும். மாற்றாக, பங்குதாரர்கள் மேலே குறிப்பிடப்பட்டுள்ள ஆவணங்களை வழங்கி, மின்னணு–வாக்களிப்பிற்கான (e–voting) பயனர் ஐடி மற்றும் கடவுச்சொல்லைப் பெறுவதற்கு evoting@nsdl.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கும் கோரிக்கையை அனுப்பலாம்.

பட்டியலிடப்பட்ட நிறுவனங்கள் வழங்கும் மின்னணு–வாக்களிப்பு வசதி குறித்த SEBI–ன் சுற்றறிக்கைகளின்படி, டீமேட் வடிவில் பங்குகளை வைத்திருக்கும் தனிப்பட்ட பங்குதாரர்கள், டெபாசிட்டரிகள் மற்றும் டெபாசிட்டரி பங்கேற்பாளர்களிடம் (Depository Participants) பராமரிக்கப்படும் தங்களது டீமேட் கணக்கின் மூலம் வாக்களிக்க அனுமதிக்கப்படுகிறார்கள். மின்னணு–வாக்களிப்பு வசதியைப் பயன்படுத்துவதற்காக, பங்குதாரர்கள் தங்களது டீமேட் கணக்கில் தங்களின் மொபைல் எண் மற்றும் மின்னஞ்சல் ஐடியைச் சரியாகப் பதிவு செய்து/புதுப்பித்து வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

காகித வடிவ பங்குச் சான்றிதழ்களை மீண்டும் சமர்ப்பிப்பதற்கான சிறப்பு சாளரம்

ஏப்ரல் 1, 2019–க்கு முன்பு சமர்ப்பிக்கப்பட்டு, குறைபாடுகள் காரணமாக நிராகரிக்கப்பட்ட / திருப்பி அனுப்பப்பட்ட / கவனிக்கப்படாமல் விடப்பட்ட பரிமாற்றப் பத்திரங்களை (transfer deeds) மீண்டும் சமர்ப்பிப்பதற்காக செபி (SEBI) வழங்கியுள்ள சிறப்பு சாளரத்தின்படி, உறுப்பினர்கள் அத்தகைய கோரிக்கைகளை பிப்ரவரி 5, 2026 முதல் பிப்ரவரி 4, 2027 வரையிலான காலகட்டத்தில் நிறுவனம் அல்லது RTA–விடம் மீண்டும் சமர்ப்பிக்கலாம் என்பதை கவனத்தில் கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். இவ்வாறு மாற்றப்படும் பங்குகள் டிமேட் (dematerialised) வடிவத்தில் மட்டுமே வழங்கப்படும்.

செயல்முறை, தகுதி வரம்புகள் மற்றும் மீண்டும் சமர்ப்பிக்கத் தேவையான ஆவணங்கள் குறித்த முழுமையான விவரங்கள் நிறுவனத்தின் இணையதளமான https://www.kingfaindia.com/investors.html –ல் கிடைக்கின்றன.

கிங்பா சயின்ஸ் அன்ட் டெக்னாலஜி (இந்தியா) லிமிடெட்டிற்காக
ஒப்பம்/–
தீபக் வியாஸ்
கம்பெனி செயலாளர்

இடம்: புனே
தேதி : 25/08/2026